தமிழ்மொழி
ஆண்டு 6

திருக்குறள்

**அ) சரியான விடையைத் தெரிவு செய்க.**

1.

- செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை.
- புத்திமான் பலவான்.
- அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.

அ) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

ஆ) அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவில்லார்
என்னுடைய ரேனும் இலர்.

2.

| | |
|---|---|
| ஆடை | களைதல் |
| நட்பு | உதவுதல் |
| துன்பம் | விலகுதல் |

அ) உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

ஆ) செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

3. அறிவுடையார் எல்லாம் ____________________ அறிவில்லார்
என்னுடைய ரேனும் இலர்.

சிறியர் பெரியர் உடையர் உடையார்

4.

<u>செயற்கரிய செய்கலா தார்.</u>

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்

செயற்கரிய செய்வார் பெரியார் சிறியர்

LIVEWORKSHEETS

**ஆ) திருக்குறளையும் அதன் பொருளையும் சரியாக இணைத்திடுக.**

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவில்லார்
என்னுடைய ரேனும் இலர்.

அறிவுடையார் எல்லாம் உடையவரே ஆவர்; அறிவில்லாதவர் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.

ஒருவர் அடையத்தகுந்த செல்வங்களுள் சிறந்த செல்வம் செவிவழி பெறும் அறிவுச்செல்வமாகும். அவ்வறிவுச் செல்வம் மற்றச் செல்வங்களைவிட சிறந்ததாகக் கருதப்படுகிறது.

உடுத்திய ஆடை நழுவும்போது ஒருவருடைய கை அவரறியாமல் உடனே ஆடையை இழுத்து மானத்தைக் காப்பது போன்று நண்பருக்குத் துன்பம் வந்த கணமே ஓடிச்சென்று அதனைப் போக்குவதே நட்பாகும்.

செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்யவல்லவரே பெரியோர். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.

LIVEWORKSHEETS